ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, முன்மொழிதல் (ஆ.செ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005–2006 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 28–7–2016 ஆம் நாளன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது: (குறுக்கீடுகள்)

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2005–2006 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year." (குறுக்கீடுகள்)